ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

11,645 — 1959 ජනවාරි 23 වැනි සිකුරාදා — 23.1.1959

11,645 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

## பதவி வெற்றிடம்

### பெண் பொலிஸ் பகுதி

#### பொலிஸ் கொன்ஸ்ரபிள் உத்தியோகம்

SH5/59

பொலிஸ் சேவையில் பெண் பொலிஸ் கொன்ஸ்ரபிள் உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப்பத்திரத்தில் விண்ணப்பங்களை நிரப்பி அவற்றை, அதிபர், பொலிஸ் பயிற்சிப்பாடசாலை, களுத்துறை என்ற விலாசத்துக்கு 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாசம் 14 ம் திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

"கசெற்" பத்திரிகை 1 ம் பாகம் 2 ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

**2. சம்பள விகிதங்கள்**

நியமனஞ் செய்யப்பட்டதும் வருடமொன்றுக்கு ரூபா 750. ஒரு வருடத்துக்குப்பின் ரூபா 840, ஒவ்வொன்றும் ரூபா 42 வீதம் 22 வருடாந்த சம்பள உயர்வுப்பணங்களாக வருடமொன்றுக்கு ரூபா 1,764 வாழ்க்கைச் செலவு உதவிப் பணம், விசேஷவாழ்க்கைச் செலவு உதவிப்பணம் முதலியன அரசாங்க விகிதங்களின்படி வழங்கப்படும். வாடகையின்றி வீட்டு வசதியளிக்கப்படும். இலவச உடுப்புகள் கொடுக்கப்படும்.

3. இவ்வுத்தியோகங்கள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றிச் சம்பளமற்றதாகும். இவ்வுத்தியோகத்துக்கு சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள், மூன்று வருஷகாலத்துக்கு தகுதிகாண் சேவையில் நியமிக்கப்படுவர்.

**4. தேவைப்படும் யோக்கியதாம்சங்கள்**

(1) ஒவ்வொரு விண்ணப்பகாரரும், 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாசம், 14 ம் திகதியில் 19 வயசுக்கு குறையாமலும் 30 வயசுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். நன் நடத்தையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
கல்வி : வித்தியா பகுதியாரால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ம் தரம் அல்லது கனிஸ்ட பாடசாலை தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(2) விண்ணப்பகாரர்கள் உடல்நலமுடையவர்களாகவும் நல்ல, தேக அமைப்பு உள்ளவர்களாகவும், பூரண கண் பார்வையுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். உயரம் 5 அடிக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பகாரர்கள் விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டால், தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும்வரை விவாகமாகாதவர்களாக இருத்தல்வேண்டும்.

(4) 1948 ம் ஆண்டின் 18 ம் இலக்க இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தின்படி விண்ணப்பதாரிகள் அனைவரும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(5) விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களுடன், பின்வருவனவற்றின் பிரதிகள் அனுப்பவேண்டும் :—
(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்,
(2) கல்வி தராதரப் பத்திரம்,
(3) அண்மையில் வழங்கப்பெற்ற மூன்று ஒழுங்கு சான்றுப் பத்திரங்கள்.
மேற் சொல்லப்பட்ட பத்திரங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையில் காண்பிக்கப்படவேண்டும்.

எஸ். டபிள்யூ. ஓ. டீ. சில்வா,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக்காரியாலயம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு ஜனவரி மீ 19 ந் உ.

**(மாதிரி) விண்ணப்பப்பத்திரம்**

1. முழுப் பெயர் (பெரிய தனி எழுத்துக்களில்) :————.
2. தபால் விலாசம் :————.
3. பிறந்த திகதியும், 14. 2. 1959 ல் வயசும் : ————.
4. கல்வித் தராதரம் சித்தியடைந்த பாடங்களின் விபரம் கொடுக்கவும் : ————.
5. விவாகமானவரா ? : ————.
6. உயரம் : ————.
7. தற்பொழுது ஏதும் உத்தியோகத்தில் இருக்கின்றீரா ? அப்படியாயின் விபரம் கொடுக்கவும் : ————.
8. தந்தையின் முழுப்பெயரும் அவரின் தொழிலும் : ————.
9. நீர் அல்லது உமது சுற்றத்தார்களுள் எவராவது ஏதாவது குற்றத்தில் சம்பந்தப்பட்டு, அல்லது குற்றம் சம்பந்தமாக கட்டளை மூலம் அழைக்கப்பட்டு அல்லது குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டு, அல்லது குற்றத்திற்காக கோட்டில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளாரா ? அப்படியாயின் விபரம் கொடுக்கவும் : ————.
10. இதற்குமுன் பெண் கொன்ஸ்ரபிள் உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தீரா ? அப்படியாயின் விபரம் கொடுக்கவும் : ————.
11. வேறு விசேஷ யோக்கிய தாம்சங்கள் : ————.

மேற்கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையும் சரியுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவற்றில் ஏதாவது ஒரு தகவல் உண்மையற்றது அல்லது பொய் எனக்காணப்படின், பொலிஸ் பகுதியில் எனது நியமனம் (என்னை இப்பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டால்) உடனே நீக்கப்படக் கூடும் என்பதை நான் உணருகிறேன்.

இடம் :————

திகதி :————    ————

விண்ணப்பதாரரின் ஒப்பம்.

---

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

### றோயல் கல்லூரி—பிரவேசத் துணைப் பரீட்சைகள்

றோயல் கல்லூரியிலே 7 ஆம் 8 ஆம் வகுப்புகளிலே சில இடங்களிருக்கின்றன.

1. இவ் வகுப்புகளிலே சேர விரும்பும் மாணவர்களுக்கு 31. 1. 59 சனிக்கிழமை காலை 9 மணிக்கு றோயல் கல்லூரியிலே ஒரு பரீட்சை நடைபெறும்.

2. நிபந்தனைகள் பின்வருமாறு :—

7 ஆம் வகுப்பிலே (Form II) சேர விரும்புவோர் தமக்குரிய மொழி மூலம் 1958 ஆம் ஆண்டில் ஆறும் வகுப்பை முடித்தவராயும் 1. 1. 59இல் 11 வயது 6 மாதங்கட்கும் 12 வயது 6 மாதங்கட்குமிடைப்பட்ட வயதினையுடையவராயும் இருத்தல் வேண்டும்.

8 ஆம் வகுப்பிலே (Form III) சேர விரும்புவோர் தமக்குரிய மொழி மூலம் 1958 ஆம் ஆண்டிலே ஏழாம் வகுப்பை முடித்தவராயும் 1. 1. 59 இல் 12 வயது 6 மாதங்கட்கும் 13 வயது 6 மாதங்கட்குமிடைப்பட்ட வயதினையுடையவராயும் இருத்தல் வேண்டும்.

3. இந்த இடங்கட்குப் போட்டியிட விரும்பும் ஒவ்வொரு மாணவரும் 31. 1. 59 சனிக்கிழமை காலை 8.30க்கு றோயல் கல்லூரிக் கந்தோருக்கு வந்து தமது வரவைத் தெரிவித்தல் வேண்டும். வரும்போது அவர் தற்போது பயிலும் பாடசாலை அதிபரிடமிருந்து தம்முடைய பிறந்த திகதி, தற்போது படிக்கும் வகுப்பு, ஒழுக்கம் ஆகிய மூன்றையும் பற்றிய நற்சாட்சிப் பத்திரமும் கொண்டுவருதல் வேண்டும்.

4. பரீட்சை திகதியன்றே மனுப்பத்திரங்களைப் பூர்த்தி செய்து கொடுக்கலாம். எனவே முன்கூட்டியே இப்பரீட்சைகளுக்கு மனு அனுப்ப தேவையில்லை.

5. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடிதமூலம் எழுதி அறிவிக்கப்படும். ஏனையோருக்கு எழுதப்படமாட்டாது.

டட்லி கே. ஜி. டி ஸில்வா,
அதிபர்,
றோயல் கல்லூரி.

கொழும்பு 7,
1959 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 20 ந் திகதி.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனப் பகுதி

ரூபா 20,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகா வில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சிறுத்திக் குளத்தில் 135 அடி நீளமான ஸ்பில் ; 3 அடி அகலமான நீர் குளாய், சேரக்கூடிய பாதை முதலியனவற்றிற்குக் கேள்விப்பத்திரங்கள் வடபகுதி நீர்ப்பாசன அதிகாரியால் (வவுனியா) 24.2.59 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு நீர்ப்பாசன அதிகாரியின் காரியாலயத்தில் (முருங்கன்) பெற்றுக் கொள்ளலாம்.

முருங்கன், உபபிரிவு-நீர்ப்பாசன அதிபர்,
12.1.59. மன்னார் மாவட்டம்.

---

## நீர்ப்பாசனப் பகுதி

ரூபா 50,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகா வில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சிறுத்திக்குளத்தில்— அணைகட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் வடபகுதி நீர்ப்பாசன அதிகாரியால் (வவுனியா) 24.2.59 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு நீர்ப்பாசன அதிகாரியின் காரியாலயத்தில் (முருங்கன்) பெற்றுக் கொள்ளலாம்.

முருங்கன், உபபிரிவு-நீர்ப்பாசன அதிபர்,
12.1.59. மன்னார் மாவட்டம்.

---

## நீர்ப்பாசனப் பகுதி

பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் (திரிகோணமலைப் பகுதி) உவர்மலை, திரிகோணமலை அவர்களால், 10. 2. 59 காலை 9.30 மணி வரை இவ்விலாகாவில் முறையே ரூபா முப்பதாயிரத்திற்கும் (ரூபா 30,000) இருபத்தையாயிரத்திற்கும் (ரூபா 25,000) அவைகட்குக் கூடிய தொகைக்கும் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, அல்லை விஸ்தரிப்புத்திட்டத்தில், நீர்ப்பாசனப் பொறியியலாளரது வீடு ஒன்றும், நுண்தொழில் உதவியாளரது வீடு ஒன்றும் கட்டுவதற்குத் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர், கல்லார், கிளிவெட்டி அவர்களிட மிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரங்களில், கேள்விப் பத்திரங்கள் தனித்தனியே இரு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடம் பெறலாம். அத்துடன் இவரது கந்தோரில் கட்டிடங்களின் மாதிரிப் படங்களைப் பார்க்கலாம்.

கேள்விப்பத்திரங்கள், தாம் இவ்விலாகாவில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந் தக்காரர் என்று நிரூபிப்பவர்களுக்கும், நீர்ப்பாசனக் கந்தோர், கல்லார், கிளிவெட்டி அல்லது ஒரு கச்சேரியில் கேள்விப் பத்திரக் கட்டணம் முறையே ரூபா ஐம்பதும் (ரூபா 50) இருபத்தைந்தும் (ரூபா 25) கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுள்ளவர்களுக்கும் மட்டுமே 7. 2. 59 நண்பகல் 12 மணி வரை கொடுக்கப்படும். தற்சமயம் அரசாங்கத்தில் ஒப்பந்தவேலை செய்து கொண்டிருப்பவர்கள், கேள்விப் பத்திரம் பெறு வதற்கு, அவ்வேலைக்குப் பொறுப்பாயுள்ள அதிபரிடமிருந்து, அவர்களது ஒப்பந்த வேலை திருப்திகரமானது என்பதை நிரூபிப்பதற்குரிய அத் தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள், பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், திரிகோணமலைப் பகுதி, திரிகோணமலை அவர்களால், அவரது கந்தோரில் 10.2.59 காலை 10 மணிக்குத் திறக்கப்படும்.

எம். ஜி. சி. பி. விஜயதிலகா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அல்லை விஸ்தரிப்புத் திட்டம்.

கிளிவெட்டி,
1959 ம் ௵ ஜனவரி ௴ 15 ந உ.

## உணவுப் பகுதி

### அரிசி விற்பனை.

(அ) 800 அந்தர் ஸ்பானிய, எகிப்திய அரிசியும் (ஆ) 300 தொன் சிறிது புழுப்பட்ட அரிசியும் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் விவசாய உணவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் 5–2–59 ந் திகதி பிற்பகல் 2.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விற்பனை உள்நாட்டுக் கொள்வனவுக்காரருக்கு மட்டுமேயாகும். உள் ளூரில் தனிப்பட்ட வியாபாரம் செய்வதற்கு விசேட பதிவு செய்வதன் மூலம் அனுமதிக்கப்படுமாயினும், அரிசி விற்பனை 3 மாதங்களில் செய்யப்படல் வேண்டும். கொள்வனவு செய்பவர்கள் விரும்பின் ஏற்றுமதி செய்வதற்கான அதிகாரப் பத்திரம் வழங்கப்படும்.

கோரிக்கைகள், இரு ரகத்திலுமுள்ள முழுத் தொகைக்கோ அல்லது நியாயமான தொகைகளுக்கோ ஏற்றுக்கொள்ளப்படும். கோரிக்கை விகி தத்துடன் மூடை ஒன்றிற்குச் சதம் 6 சுமை கூலியாக விதிக்கப்படும். கோரிக்கை ஏற்கப்பட்ட இரு வாரங்களில் அரிசி அப்புறப்படுத்தப்படல் வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட விலை கோரிக்கை அனுமதிக்கப் பட்ட ஒரு வாரத்துக்குள் செலுத்தப்பட வேண்டும்.

இக்காரியாலயத்தில் ரூபா 100 தங்குபணமாகக் கொடுப்பதன் மூலம் பெறும் விண்ணப்பப் பத்திரங்களில் கோரிக்கை செய்யப்பட வேண்டும். சித்தியடையாத கோரிக்கைக்காரருக்குத் தங்குபணம் திருப்பிக் கொடுக்கப் படும்.

கே. எம். டீ. ஜயனெத்தி.
உணவு அதிகாரி.

கொழும்பு,
1959 ம் ௵ ஜனவரி ௴ 17 ந் உ.

---

## வித்தியா பகுதி

### கீழைத்தேசச் சங்கீதக் கருவிகளை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1958/59

கீழைத்தேசச் சங்கீதக் கருவிகள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 13 ந் திகதி மு. ப. 10.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, (விநியோகக் கிளை) வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. தேவைப்படும் சங்கீதக் கருவிகள் எதையேனும் அல்லது எல் லாவற்றையேனும் முழுவதாக அல்லது பகுதியாக விநியோகஞ் செய் தற்குக் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

4. கேள்விப்பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ள வர்கள், கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங் காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 12 ந் திகதி வரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்தின,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி,
கொழும்பு, 2
1959 ம் ௵ ஜனவரி ௴ 19 ந் திகதி.

---

## தபாற் தந்திப் பகுதி

### பலதிறப்பட்ட உபயோகிக்கமுடியாத சாமான்கள் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

பலதிறப்பட்ட உபயோகிக்கமுடியாத சாமான்கள் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 24. 2. 1959 முற்பகல் 9.30 மணிவரை தந்தி டெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

முழு விபரங்கட்கு இதே வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி 1 தொகுதி II (சிங்கள) விளம்பரங்களைப் பார்க்கவும்.

எச். ஈ. செனிவிரத்ன,
தபாற் தந்தி அதிகாரி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு,
1959 ம் ௵ ஜனவரி ௴ 19 ந் உ.

## கடற்றொழிற் பகுதி

**களுத்துறை மாவட்டத்தில் கட்டுக்குருந்தையில் தனித்தனி மலசல கூடங்களுடன் கூடிய 25 கடற் றொழிலாளர் வீடுகளையும் ஒரு கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள்.**

களுத்துறை மாவட்டத்தில் கட்டுக்குருந்தையில் தனித்தனி மலசல கூடங்களுடன் கூடிய 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் 1 கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச்சபைத் தலைவர்களால் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ம் திகதி பி. ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம் கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்பிற்கு வெளியே யுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது இத்தொகைக் காய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1959 ம் ௵ ஜனவரி ௴ 19 ம் உ.

---

## கடற்றொழிற் பகுதி

**களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை வடக்கில் தனித்தனி மலசல கூடங்களுடன் கூடிய 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் ஒரு கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள்.**

களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை வடக்கில் தனித்தனி மலசல கூடங்களுடன் கூடிய 25 கடற்றொழிலாளர் வீடுகளையும் ஒரு கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் கேள்விச்சபைத் தலைவரவர்களால் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12ம் வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில், அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிடவேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற் மேலும் பதிவு செய் தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ம் திகதி பிற்பகல் 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3.
1959 ம் ௵ ஜனவரி ௴ 19 ம் உ.

---

## கடற்றொழிற் பகுதி

**மன்னார் மாவட்டத்தில் பனங்கட்டிக் கொட்டில், மலசல கூடங்கள் இணைக்கப்பெற்ற 18 கடற்றொழிலாளர் வீடுகளையும் 1 கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள்.**

மன்னார் மாவட்டத்தில் பனங்கட்டிக் கொட்டில், மலசல கூடங்கள் இணைக்கப்பெற்ற 18 கடற்றொழிலாளர் வீடுகளையும் 1 கிணற்றையும் நிர்மாணிப்பதற்காய கேள்விகள், செனற்சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கைத்தொழில் கடற்றொழில் அமைச்சுவின் கேள்விச் சபைத் தலைவரவர் களால் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரையுமேற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதி களில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள், அரசாங்கத்து டன் கட்டிட வேலைகளுக்காக ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ம் திகதி பி. ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்பிற்கு வெளியே யுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100 வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற் றுக் கொள்ளலாம்.

டி. ரீ. ஈ. ஏ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1959 ம் ௵ ஜனவரி ௴ 19 ந் உ.

---

# பொருட்கள் ஏலவிற்பனை

**வள்ளம் நெம். W.T. 163, A.IALIS.V.A.T.T.**

**வங்காலேயில் ஏலவிற்பனவு**

இத்தால் பிரசுரப்படுத்துவது இதன் கீழ் விபரித்திருக்கும் ஒரு அடையல் வள்ளம் மாசி மாதம் 6 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வங்காலேயில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வள்ளத்தின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | .. .. | 28 அடி |
| அகலம் | .. .. | 2 அடி 9 அங். |
| ஆழம் | .. .. | 1 அடி 3 அங். |

சி. லுடெக்கின்ஸ்,
அடையல்பொருள் ஒப்புக் கொள்பவர்.

MNC 21,
மன்னார் ரேகு,
10.1.59

---

## விளம்பரம்

1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 4 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 6 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல் களும் 1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 2 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 16 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.